# ஞான காவியம் 1000

**Gnana Kaaviam 1000**

**அகத்தியர்**

**Agathiar**

## முதலாம் காண்டம்

தொடக்கம்: June 18, 2001 பஞ்ச நாதாக்களுந்தேசமறிக

ஆதியந்த பூரணமாய்ச் சுழியாய் நின்ற
    அமர்ந்த சுழிமூல கணபதியே போற்றி
நாதமறையோர் களானுமைக்குச் சொன்ன
    ஞான கருக்குருவினிட ரவியே போற்றி
நீதிமதிரே சகமாய் பூரகமாய் நின்ற
    நிகழ்ந்த பதிபாச உபநிடமே போற்றி
சாதிபலவுயிரெறும்பு சிவமே யான
    சச்சிதானந்த பரிபூரணமே போற்றி.

பூரணமாய் நின்ற கைலாசந்தன்னில்
    புகழும் புரியஷ்ட்ட குண்டலியே போற்றி
வாரணமாய் மூலவெளிக்கப்பால் நின்ற
    வாத கடல் காவியத்தின் வதிதங்காப்பு
நாரணமாய்க் காரணங் கண்டருளிச்செய்த
    நவப்பிரம்ம கமலமத பிடங்காப்பு
ஆரணமாய் மணிபூர மனாகத மெய்ஞ்ஞான
    அருள்தருகும் விசுத்தியாக்கினை காப்பாமே.

காப்பாகுங் காவியந்தான் பரமெய்ஞ்ஞானங்
    கற்பமுண்ணுஞ் சிவயோகங் கடந்த பண்போர்
மூப்பாகு மருளொன்றாய்ப் பொருளொன்றாக
    முணர்ந்த முன்னோர் குணமூன்றால் மதியேகண்டு
தப்பில்லா சாயுச்சிய பதவியாலே
    சதாசிவத்தோடடை வருந்தான் சைதன்யமாக
எப்போதுஞ் சடலமதுக் கழிவில்லாதால்
    யெடுத்துரைத் தாரீசனுமைக்கியம்பினாரே.

இயம்பினதோரே தென்றால் சரிதை கிறியை
    யிதுரெண்டு மின்னமொருரெண்டுகேளு
ஒயம்பினதோர் சதாயோகம் பரமெய்ஞ்ஞானம்
    உரைத்த விதி நால்வருக்கும் பொதுவாய்ச் சொன்னார்
செயம்பினதோர் குறுகையனால் பதவிகேளு
    சாலோக சாமீப சாரூபந்தான்

சயம்பினதோர் சாயுச்சிய பதவி நாலு
சாற்றினா ரீசனவர் போற்றினேனே.

போற்றினதோரீ சனுமைக் கருளிச்செய்தார்
புகழுஞ் சவுந்திர தேவி புகட்டினாள்பார்
நாற்றினதோர் ஞான கடலமுர்த ஞான
நந்தீசர்க்குப தேசமளித்தாள் கன்னி
பார்த்து மனமகிழுந்து நந்தி அருளினார்பார்
பார் புகழுந்தன் மந்திரி பகவானுக்கு
ஆற்றினதோர் தன் மந்திரி பகவானன்று
அருளினார சுவனிக்கு அருளினாரே.

அருளினார சுவனிதான் மெய்ஞ்ஞானத்தை
அதீதபொருள் காவியந்தான் ஞான காவ்யம்
மருளினாரவருடைய அநுக்கிரகத்தால்
மாட்டினாரென் தனக்குப் புகட்டினார் பார்
நருளினார் யான்கண்டு புலத்தியனே யோகி
நளின மாயுன் தனக்கு உபதேசித்தேன்
வருளினோம் வியாசரோடெதிர்த்து நாமும்
வசனித்தோம் பரஞானம் வருஷித்தோமே.

வருஷித்த காவியந்தான் ஆயிரமுஞ் சொச்சம்
மகத்தான ரிஷி தேவர் முனிவோர் கூடி
அருஷித்த ஆயிரந்தான் ஞானபீடம்
ஆயிரத்தெட்டண்டமென்ற மௌனபீடம்
பருஷித்த பரப்பிரம சுரூபபீடம்
பருசுடைய சருவேத கபாலபீடம்
வெருஷித்த அகாரமென்ற உகார பீடம்
வேதாந்த மென்றதொரு வின்னூலாமே.

வின்னமில்லை பின்னமில்லை மானமில்லை
விதியில்லை மதியருவி விளங்கா நின்ற
அன்னமில்லை வெளிக்கப்பால் முப்பாழான
அதிக துரியாதீத மதுக்கப்பாலே
கன்னவில விளங்குமதிச் சிவமேயான
கனவு கடந்தப்பாலே ரவிக்கப்பாலே
சொன்னபதி யென்பதுபோலே நின்ற
சோதிசுடர் பிரபையொளி சூட்சமென்றே.

(8)

## சித்தாதிகள், முனிகள், ரிஷிகள், தேவர்கள் தரிசனம்

சூட்சமென்றுந் தாலமென்றுங் கபோலமென்றும்
துலங்கி நின்ற அபோலமென்றுந்து சமே கண்டு
வாசமலர் போலே பரிமளங்கள் வீச
மௌனமொழி ஆயிரத்தின் விளக்கமெல்லாம்
நேசமென்ற பசுபதியின் பாசத்தாலே
நிகழ்த்துகிறோம் மௌன சித்தர் ஞான வாழ்க்கை
ஆசையினால் பாசமதை அகற்றி நின்ற

ஆறாதாரப் பொருளினதி தங்காணே.

காணடா கவுனசித்தர் குளிகை சித்தர்
கண்மனியே கெவுனசித்தர் மௌனசித்தர்
நாணடா ஞான சித்தர் யோக சித்தர்
நால்வரென்ற ரிஷிகளுடன் முனிவர்தேவர்
வேணடா வேதரிஷி அனந்தமான
வேதாந்த தவமுனிகள் கோடாகோடி
பாணடா மூலகணபதிதான் கூட
பரபிரம்ம விஷ்ணு ருத்திர மயேசன்கூட.

கூடான சதாசிவத் தோடாறு பேரும்
கோடான கோடி சதா கோடி சித்தர்
நாடான சதுர்முகன்தான் பிரம்மசத்தி
நாயகியாள் சதுர்பீடமமுர்தபீடம்
ஆடான அஷ்டகும்பப் பீடத்தேகு
அகத்தியர் தன் கயிலைகிரி சிமாசனத்தில்
வாடான வேதரிஷி வியாசருந்தான்
வந்தார்கள் பரபிரம்ம பீடங்காணே.

பீடமாம் சதாசிவத்தினமிர்த பீடம்
பிலத்ததொரு சிவபீடமருகே வந்தார்
ஆடமாம் ஆதி சிவனுமையைப் பார்த்து
ஆகாஎன்று ரிஷியோரை அதிகமென்றோர்
வேடமாம் வேதரிஷி வியாசருந்தான்
விண்ணப்பமீசனுக்கு விரும்பிச் சொன்னார்
பாடமாம் மகாகோடி சித்தர் தேவர்
பாடினார் வேதமொழி விளக்கந்தானே.

விளக்கமென்ற ஞான மொழி காவியந்தானின்னூல்
விளம்பினாராயிரத்தை அகத்தியன் சீசான்
அளக்கமென்ற அகத்தீசர் பரையுமீசன்
அகத்திலே வரவழைத்து மகத்துவஞ்சொன்னார்
நிளம்பினதோர் ரிஷிதேவர் தம்முக் காதி
நீடுலகிலருள் செய்தீர் நேர்மையாக
பளக்க மென்ற வலதுபக்கம் வரவழைத்து
பானுமையும் அகத்தியற்கு உபதேசித்தார்.

உபதேச மென்ன வென்றால் சொல்லக்கேளு
ஊம் ஓம் ஆம் என்ற உயிரின் பீசம்
உபதேச மென்ன வென்றா லிரண்டாம் பீடம்
நிகழ்த்தினார் உபீம் ஓரீம் அரீமென்றுந்தான்
செபதேசமென சிவம் சிரீம் ஓம்
சிவயநம மநயவசி சிங் உங் கென்றார்
அபதேசமல்லவடா நவபீடந்தான்
ஐம்பத்தொன்றட் சரத்துக்குயிர் பீசமொன்றே.

அகத்தியருக்கு சதாசிவம் உபதேசம்

உபதேச சிவபீடம் சக்திபீடமென்று தவமனிதர்களுக்கு வேதவிதி மனிதர்களுக்கு – விவரம்.

ரெண்டான பீடமப்பா சமாதியோகம்
    நிகழ்த்தினோம் சிவபீடம் சிமாசனமேயாச்சு
ஒன்றான விப்பீடம மிருத பீடம்
    ஓகோ கோவுபதேச முணர்ந்தாரீசன்
அண்டான ஆதிசிவன் வரமேத்தாதார்
    ஆயிரத் தெட்டனுபீடம் பிரவேசித்தார்
நின்றான நிகழ்கோடி கோடாகோடி
    நிகழுபந்த சதாகோடி ரிஷிகள் தேவர்.

தேவரொடு மாலயனும் அரனுங்கூடி
    தெட்சணத்துப்பரப் பிரம்மமிவரே யென்றார்
நாவரொடு பரப்பிரம்ம பீடந்தந்து
    நவசத்தி பீடமதைப் பிரவேசித்தார்
ஆவரெல்லாங்கூடி பரப்பிலம்ம பட்டம்
    அளித்தாரே அகத்தியனார் ஆ ஊ வென்றார்
பாவரென்ற வியாசருடைச் சீஷாள் தாமும்
    பதினாறு லெட்சம் ரிஷி அருகத்தானே.

தானென்ற ரிஷியோர்கள் வேதமொத்த
    தருவான நால்வேதஞ் சாதியேற
ஆனென்ற அதுக்கு முன்னாண் பெண்ணிரெண்டு
    அகத்தீசர் பிரம்ம சிஷ்டை அருளினார்பார்
வேனென்ற அகத்தியற்கு விம்பதாக
    வியாசனவரீச னண்டை விரும்புவார்பார்
வானென்ற சாத்திரங்களாறதாக
    நளினமென்ற புராணம் பதினெட்டதாமே.

தாமேதான் செகத்திலுள்ள மனிதற்காக
    தாவித்தார் கோவில் குளஞ் சிவாலயங்கள்
வேமேதான் விஷ்ணுவிட ஆலயங்கள்
    விதமான பாரதங்கள் கதைகளாக
நாமேதான்... பேயா கப்பிடாரி பூதம்
    நிச்சயமாய் மனிதருக்குந் திதிகள் கூட
பாமேதான் மனிதருயிர் பிரவேசித்தால்
    பால்கொண்டு காடுதனில் பகண்டார்பாரே.

பாரென்ற கொள்ளிகுடமுடைத்துப் பின்னும்
    பரிவான கர்மக்கிரிகை பானஞ்செய்தார்
சேரென்ற செனித்த பிண்டமதுக்கு வியாசர்
    செனித்த தனாலாவதென்ன வென்றுகேட்க
வேரென்ற வேதமுனி அகத்தியனார் தா(ம்)
    வியாசருடன் தர்க்கமிட்டு விளக்கினார்பார்
நாரென்ற ஞானத்துக் கடுக்காதைய்யா
    நான்மறைகள் வேதத்துக் கடவிதாமோ.

ஓமென்ற அகத்தியரை ஈசன் கேட்க

உணர்ந்த மொழி தப்பாமல் காவியஞ் சொன்னார்
நாமென்ற காவியந்தான் மறைகளுக்கு
நாலு பலமதிகமென்று ஈசனுக்கு
ஆமென்ற நாலுதிசை அஷ்டதிக்கும்
அகண்டமென்ற பதினாறுகோண மட்டும்
மாமே தானாயிரத் தெட்டண்டத்திற்கு
மதிகோடி ரவிசூர்யர் கிழக்கு மேற்கே.

கிழக்கிருந்து மேற்கே ரவி மதியுமாகி
கெணிதமென்ற மண்டலங்கள் மூன்றுமாகி
பழக்கமதாயி கினுடைய விரிவினாலே
பகிரண்டமெழு நூற்றியெழாயிரந்தான்
ஒழுக்கமில்லாப் பொருளாக்கு யோசனை நீளந்தான்
ஓகோகோ யெண்பத்தோராயிரம் யோசனைகளாகி
நழுக்கமில்லா நீளமது அறுபதினாயிரமதாகி
நளினமெள்ற அண்டமாயிர யோசனைக்குள்ளாமே.

ஆமென்ற ரவிசூர்யன் மண்டலத்தை மாறி
அடைத்த மதிசரியாகி திசைகளாகி
ஓமென்ற பூரணத்தால் திக்குமாகி
ஒன்றான அதுக்கு ரெட்டிக் கோணமாகி
பாமென்ற பகிரண்டமதுக்கு ரெட்டி
பகர்ந்த கணபூத கிரக துவராபாலர்
மானென்ற சத்த நவ துரகியாகி
மஷ்டகெசம் அஷ்டபாலாள் வசனித்தாரே.

வசனித்தார் சூரிய மண்டலத்துக் கப்பால்
மதியான நவகண்டம் ஆயிரத்தெட்டண்டம்
அசனித்தார் அதுக்குமுன் யோசனைகளாகி
அளவில்லா மடமந்திரங்கோடா கோடிவெள்ளம்
துசனித்தார் சீவவுயிர் கொன்றதாகி
துவமுள்ள உயிர் செனிக்க இடிகளாகி
மசனித்தார் மட்சேங்கிரம் மேகமாகு
மட்சேங்கிரக் கொடி மின்னல்மழைகளாமே.

(சூரியன் அண்டம் யோசனைகளிட அகல நீளமறிய –
மேகங்கள் இடிகள் மின்னல் மடச்சத்தங்கள் அறியவும்)

மழையான மேகம் பனிரெண்டு லட்சம்
மளவில்லா சத்தம் பதினாறு லட்சம்
அழையான சூரிய மண்டலத்துக் கப்பால்
ஐந்நூறு லட்சம் யோசனைக்கப்பாலே
பழையான மேகம் பழைப்படியே யோடும்
பதினாறு லெட்சம் யோசனைமட்டாக
வழையான வாசுகி யென்றிருந்த காத்து
வாய்வதுதான் மெகசத்த மிதுக்கப்பாலே.

ஆமேதானக்கினி மண்டலத்துக் கப்பால்
அறையுறோஞ் சந்திர மண்டலத்தோ டொக்கும்

நாமேதான் நவபிர்ம்ம சிஷ்டையாலே
    நாம் சொன்னோம் அண்டசராசரங்சள்தானும்
பேமேதான் பிரிதிவியுமப்புந் தேய்வும்
    பேரான வாய்வாகாசத்தோடஞ்சு
யேமேதானிதனாலே சராசராங்கள்
    எடுத்தப்பா மேலண்டமியம்பினோமே.

இயம்பினதோ ரென்ன வென்றால் புலத்தியனேகேளு
    மீசனைத்தான் வியாசரவரியம்பிக் கேட்க
அயம்பினதோரரன் செயலால் கோடாகோடி
    அளவிறந்த சதாகோடி காலமெல்லாம்
தயம்பினதோர் தவரில்லாத் தவமே செய்தார்
    சதாசிவன்தான் மனங்கனிந்து தயவேசித்து
வியம்பின தோரீசனவர் வியாசரைத்தான்
    வினவியது கேட்டதனால் விளம்புவாரே.

(சதாசிவத்துடனே வியாசர் வினவுதல்)

விளம்புவார் வியாசரைத் தாஙீசன் கேட்க
    விரும்பியவர் கைகுவித்து விளம்புவார்பார்
வளம்பு வாரெனையடுத்து வயணங்கேட்டீர்
    பூரணியில் வேதநால் சாத்திரமாறாக
பளம்புவார் புராணம் பதினெட்டதாத
    பயனருள வேணுமய்யா பரமவாழ்வே
எளம்புவாரீசனதுக்க கருளிச் செய்தார்
    மீசனுடை உத்தார மகிழ்ந்தார்தாமே.

தாமென்ற சதாசிவன்தான் வரமேதந்தார்
    சரணமென வியாசரவர் வார்த்தைவாங்கி
பாமே நீபார் தனிலே மனிதர்கட்குப்
    பாடினார் வேதநால் சாஸ்திரமாறாகப்
போமென்ற மனிதருக்குச் சிவாலயங்கள் கோவில்
    புகட்டினதா லீசனவர் சபையோர்முன்னை
நாமென்று மகத்தியரே வியாசருக்கு
    நன்மையுடன் வினவினதால் நாம்சொன்னோமே.
(28)

சொன்னதொரு அண்டசரா சரங்களாலுஞ்
    சொலப்பெரிய வுதய கிரி அஸ்த்தத்தாலும்
வன்னதொரு வடகிரிகள் தென்கிரிகளாலும்
    மகத்தான கோடாகோடி மலைகளாலும்
வென்னதொரு விருட்சங்கள் மரங்களாலும்
    வெகுகோடி மிருகவுயிர் செடிகளாலும்
புன்னதொரு அசோகு புன்னை கற்பங்களாலும்
    புகழ்பெரிய சீவர்தமர் புகட்டிட்டாரே.

புகட்டிகார் மலைகிரிகள் சாகரங்கள் சத்தம்
    புகழான பூமியென்றுந் திகிரியென்றும்
பெகட்டினார் பிரிதிவி யோடஞ்சுங்கொண்டு

பேரான மலைபூமி சலங்களாக
அகட்டினார் அப்பது தானிறங்களாக
அடியுதடு மேலுதடு யோசனைதானாக
யெகட்டினா ரெண்ணூறு... கோடியாக
யெண்ணூறு கோடி யோசனை தானாமே.

(அகாரம் விந்து கீழ் லோகம் – உகார மகாரம்
மேல்லோகம். சிவம் கீழ்லோகம். இரவு பகல்
ரவி சூரியன் பஞ்சபூதம் சகலவுயிர்களுக்கும்
அஞ்சு பூதமென்றறியவும்)

ஆமென்ற அகாரமதுமேல் லேகந்தான்
அப்பனே ஐம்பதினாயிரம் யோசனைகளாகும்
நாமென்ற ரவி சூரியன் கிழக்கு மேற்கே
நளிமமென்ற பூமியின் கீழ் பிரகாசிப்பார்
தாமென்ற ராவுபகல் பிரிதிவியோ டொக்க
தனதான அப்பு வென்ற இரண்டைக்கேளு
சோமென்ற ரவியதுதான் சூரிய விந்தாகும்
சொல்லுகிறோம் மதிசந்திரன்றாவது தானாமே.
(31)

ராவான நாமமதால் சத்தியாச்சு
நாதவிந்தால் சதாசிவன்தான் பிறவியாச்சு
பாவான பானுவென்ற சூரியனாச்சு
பசளையென்ற மதிதனிலே சந்திரயோகம்
நாவான தசையதுதானிரவி யாச்சு
நாலுலெட்சம் யோசனைதான் மண்ணதாகும்
ஆவான காற்றதுதான் பிரிதியோடொக்கும்
அண்டசராசரங்களெல்லா மதுக்குள்ளாமே.

ஆமென்ற யிதின் விரிவு செலத்தினாலே
ஆச்சுதப்பா யிதில்ப்பாதி சமுத்திரந்தான்கேளு
ஏமென்ற யெழுபத்தோராயிரந் தானாகும்
என்மகனே அகலமது யோசனையைக்கேளு
வாமென்ற வாயுவது சலத்திலாகும்
வாயுவது யெழும்புமப்பா அப்புனாலே
நாமென்ற நாலுலெட்சம் யோசனைதான் நீளம்
நலச்சவுக்கம் வடவாலகிரிகள் வேர்தாமே.

வேறான மண்டலங்கள் மும்மூன்றாலே
விளங்கியது ரவிசூரிய மண்டலஞ்சொன்னோம்
சாறான சந்திர மண்டலமுஞ் சொன்னோம்
சமத்தான அக்னிமண்டலமுஞ் சொன்னோம்
ஆறான அண்ட சராசரங்களாக
அடிமுடியுங்கொடி முடியுந்திக்குஞ் சொன்னோம்
பாரான பஞ்ச பூதமதுவால் லோகம்
பாரேழு புவனமும்நாம் பாடினோமே.

பாடினோம் பலவுயிர்க்குமது தான்பூட்டாய்

பகலிரவா நின்றதுவு மதுவேயாகும்
சாடினோம் சத்திசிவ பீசமாக
சலமண்ட மென்றதுக்குமிது தான்பூதம்
நாடினோம் ஞானகடலிதுக்குப் பேரு
நளினமென்ற காவியந்தான் பரமெஞ்ஞானம்
ஆடினோ மதுக்கப்பால் சாகரமும் சொன்னோம்
அனந்தமே கடல்ஞான விரிவைக்கேளே.

கேளடா புலத்தியனே மெஞ்ஞான யோகி
கிருபையுடன் சபையோர்கள் முன்பாகத்தான்
காளடா ஞானகடல் மூன்றதாகும்
கண்மணியே ரவிகடல்தான் பிரிதிவியின்கூறு
மாளடா மதுக்கப்பால் மதிக்கடலேயாகும்
மகத்தான அப்புவின் கூற்தானாகும்
ஏளடா மதிக்கப்பால் அக்னியின்கூறு
யின்பமுள்ள தேய்வினுடகூற தாமே.

கூறான அக்னிதான் பிரவேசிக்கும்
கூறினோம் தேய்வதுவின் கூறுக்கப்பால்
வாறான வாய்வதுதான் பிரவேசிக்கும்
வாதாசடலென்ற துக்குப் பேருண்டாச்சு
ஆறான வாய்வதுதான் பிரவேசித்து
அப்பனே தேய்வில் வந்து அப்பில்மாறும்
பேறான பிரிதிவிதான் மண்ணிலாகும்
பேசினோம் வாதகடற் கப்பாற்கேளே.

அப்பாலுந்தப்பாது அமுர்தப்பாலு
அதுக்கடுத்த மதப்பாலு சோமப்பாலு
நப்பாலு மருவியதுக்கப் பாலோடும்
நாலு லட்சம்யோசனை தான்கலமாகும்
முப்பாலுங் கூடியது நப்பாலாகு
மூதண்டயோ கப்பால் ஞானப்பால்தான்
செப்பாலு முப்பாகுமப்பா கேளு
செனித்ததடா ஆகாச பூதமஞ்சே.

செனித்த வாகாசத்தோ டைந்துபூதம்
செப்பார்கள் பெரியோர்கள் செப்புறோம்பார்
அனித்த வாகாசமது சத்தமாகி
அமிர்தகடலஞ் சாகப் பிரிவதாச்சு
முனித்தமும் மண்டலமும் மதுக்குள்ளாச்சு
மூதண்ட ரவிமதியுஞ் சோமனாச்சு
மனித்த மாகாசத்தோ டஞ்சுங்கூடி
ஆறுலெட்சம் கோடியோசனைக் குள்ளாமே.

உள்ளான அடிமுடியுங் கோடியேகேளு
ஓகோகோ ஆகாசமதுக் கீடுண்டோ
பள்ளான பஞ்சமுர்தஞ் சொலிக்குமங்கே
பரிவான அருவியது பாச்சல்பாயும்
அள்ளான வள்ளென்று மதுக்குப்பேரு

அமுர்த சலசத்தினுடை ஆக்கினைதானாகும்
வள்ளான ஆக்கிகைதான் வாய்வதாகும்
வாய்வதும் தேய்வதுவில் வளப்பமாமே.

வளப்பமென்ற தேய்வது தான்ப...வாகும்
வசனித்தோ மிதனாலும் பிரிதிவியில்சேரும்
கொளப்பமென்று மெண்ணாதே மண்ணதாகுக்
கூறான மண்ணில் வந்து நாலுஞ்சேரும்
களப்பகடல் ஞானமிது வொன்றிலாதால்
கருவான ஓங்காரக் கம்பமாகி
அளப்பமென்ற அண்டசரா சரங்களாகு
ஆயிரத் தெட்டண்டமதாய்... விரிவும் ஆச்சே

(பரபிரம்மக் குண்டலிய்னாலே சத்தசானாரங்கள்
திகிரிகிரிகள் சலமுந் தீர்த்தங்கள். அதனாலே........
சகலத்துக்கும் பெரிதாகிய பரமென்றறியவும்.)

ஆச்சுதென்ற பூதமஞ்சங் குண்டலிக்குள்ளாகி
அவ்வஞ்சு மெழும்பியது அண்டமாகி
காச்சு தென்றுங்கடலாகி......ப்புனலாகி நீரதாகி
கல்மலைகள் பருவதமாய் கிரிகளாகி
ஏச்சென்ற யேமகிரி..... வடவாலாகி
யென்மகனே புவனமெல்லா மிருளதாகி
வாச்சு தென்ற ராப்பகல்தான் அதுவேயாகு
வளர்ந்தப்பா வுலகமதால் புவனமாச்சே.

ஆச்சென்ற குண்டலிதான் அகண்டமாகி
அளவில்லா சீவவுயிர் அதுவேயாகி
மாச்சென்ற மதுவதுவாலப்பு வாகி
மளவில்லாப் பரபிரம்மக் கபாலமாகி
வாச்சென்ற யேகசற் பிரம்மமாகி
வாகான நவகண்டம் சுரூவமாகி
கோச்சென்ற குருவாகிப் பரவைகளாகி
கூறினோஞ் சச்சி தானந்தமாமே.

ஆமேதான் சச்சிதானந் தமான
அரூவத்தை யறியார்கள் அயனுங்காணார்
பாமேதான் பரவெளியில் கம்பமாகிப்
பகிரண்ட மண்டப கிரண்டமான
சோமேதான் சுரூபமென்ற அருவங்கண்டால்
சோதிசுடர் மணிவிளக்கின் தீபம்போலாம்
ஏமேதான் எங்குமெங்கு மருதவமான
யிருளான பரவெளியிலிருந்த வாறே.

வாறான பரமென்று மதுக்குப்பேரு
வதிகமென்ற பரமதுதான் பெரிதாய்நிற்கும்
மாறான பஞ்சபூதமது வாலாச்சு
நவசரா சரங்களெல்லா மதுவாலாச்சு
தேறான தேவதைக ளதனாலாச்சு

தேச வுபதேசமெல்லா மதனாலாச்சு
ஆறான அஞ்சுக்கும் பெரிதாய் நின்ற
ஐயென்ற அட்சரத்துள்ளடக்க மாச்சே.
(45)

ஆச்சென்ற பஞ்ச கர்த்தாளதுக் கீடில்லை
அதுவான பரமதுவாலஞ்சு மாச்சு
ஓச்சென்ற ஓங்கார வட்டமாச்சு
உலகமெல்லாம் ஒவ்வதுவா லிழுக்கலாச்சு
கேச்சென்ற கெணபதிதான் மூலபீடங்
கெணிதமென்ற பஞ்ச கர்த்தாள்வரலாச்சு
வாச்சென்றமணி மந்திர மவராலாச்சு
மனப்பத்தோடச் சரமுமவரா லாச்சே.

மவரான குருவாலே சரிதையாச்சு
மச்சரிதை கிரிகையென்று மவராலாச்சு
ஓவரான ஓவாச்சு ஒவ்வதாச்சு
ஓகோகோ யோகமென்னும் ஞானமாச்சு
அவரான சரிதையது சாலோகமாச்சு
அச்சரிதைகிரிகையிலே சாமீபமாச்சு
சவரான யோகமது சாரூபமாச்சு
சமத்தான ஞானமது சாயுச்சியமாச்சே.

ஆச்சப்பா சிவமாச்சு சத்தியாச்சு
ஆண்பெண்ணும் ரெண்டாச்சு ஒன்றதாச்சு
பாச்சப்பா பாவித்தால் திட்சையாச்சு
பரபிரம்மபீட மென்ற நாதமாச்சு
கோச்சப்பா உருபாச்சு அருவமாச்சு
குருவான கருக்குருவுந் திருவுமாச்சு
ஏச்சப்பா எவ்வுயிரு மவ்வுயிரதாச்சு
யெப்பிறப்பும் பரமதுவால் குண்டலியாலாச்சே.

(பரத்தில் பஞ்ச பூதமென்றறிய தற்பரமென்றறியவும்,
திரோதாவி பரமபதம் ஓம் என்ற சதாசிவத்தில்
அகத்திய சுவாமிகள் பணிதல்)

ஆச்சென்ற குண்டலிதான் பார்த்து நேர்மை
அனுசரித்த யுகத்தருமை யப்போதையா
மாச்சுதென்ற மாயிதிரோ தாயைக்கூடி
மயக்கமதால் மாய்கை வந்து உலகமாச்சு
காச்சென்ற கம்பசல ஸ்தம்பமாச்சு
கண்மணியே நேர்மையிலே கருவியாச்சு
தாச்சென்ற தத்துவங்கள் தொண்ணூற்றாறாச்சு
தராதரமாய் நிராதரமாய் தற்பரந்தானாச்சே.

ஆச்சென்ற தற்பரத்தை யார்தான் கண்டார்
ஆயிதிரோ தாயியைத்தானார் தான்கண்டார்
பாச்சென்ற பரம் பதமார்தார் கண்டார்
பஞ்சபூத மெஞ்ஞானமார் தான்கண்டார்

வாச்சென்ற வஸ்துவைத்தானார் தான் கண்டார்
வசனித்த மெய்ஞ்ஞானக் கடலார் கண்டார்
ஏச்சென்ற யேகரூபமெவர் தான்கண்டார்
இயம்பினதோர் பசுபதிதான் பாசங்கண்டோரே.
(50)

கண்டோர்கள் கடல்ஞானக் கடலதாகி
கடலதுவே கருவியதாய் முறமதாகி
விண்டோர்கள் குண்டலியைக் கண்டநாதன்
விளம்பினதோர் மெய்ஞ்ஞானக் கடலில்மூழ்கி
அண்டர் தொழும் பரப்பிரம்மக் குண்டலியைக்கண்டு
ஆயிதிரோதாயி பதம்அருளே போற்றி
சண்ட மாருதங்கள் என்றமாய்கை தள்ளி
தற்பரத்தின் கிருபையதால் தாவித்தோமே.

தாவித்தோ மாயிரந்தான் புலத்தியனேகேளு
தமிழ்பேதமில்லையடா காவியமின்னூலில்
ஆவித்தோம் பரஞான மெய்ஞ்ஞானந்தான்
ஆயிதிரோதாயியைத் தானடிவணங்கி
மாய்வித்தோம் மாய்கையைத்தான்ஞ் ஞானவாளால்
வசனித்த மெய்ஞ்ஞான அரத்தால்வெட்டி
பாவித்தோம் பரமபத அகாரவாழ்வே
பரமகுரு குண்டலியைப் பணிந்தோம்நாமே.

பணிந்தோமே சதாசிவத்தைப் பரத்தால்கண்டோம்
பரமதுவால் பஞ்சபூதப் பதியைக்கண்டோம்
அணிந்தோமே... பிரிதிலியின் கூறால்
ஆயிரத்தெட்டண்டநிலை அரியதாக
மணிந்தோமே அண்ட சராசரங்கள் மெத்த
மளிவல்லாப்பூமி பாராள மெல்லாம்
சனிந்தோமே சலசத்த கடலாகாசம்
சதாசிவத்தின் பீடமதில் தலங்கண்டோமே.

தலமான ஆறுதல் பிடங்கண்டோம்
தலத்தப்பால் மேலாறு தலத்தைக் கண்டோம்
பலமான பதிபாசபர மெய்ஞ்ஞான
பதியான பரஞான பீடங்கண்டோம்
வலமான பரப்பிரம்ம சொரூவங் கண்டோம்
வவலத்தில் சூலமென்ற வதீதங்ண்டோம்
சலமானப..ச்சல் கலசங் கண்டோம்
சலபஞ்ச சத்தமதால் சரக்காங்கண்டோமே.

கண்டோமே சாகரங்களண்ட மாகில்
கனிந்த அண்டசாகரத்தில் மண்டலங்கள் கண்டோம்
மண்டோமே மண்டலத்திலாயிரத் தெட்டண்டம்
மதிகோடி ரவிமதியில் பிறவிகண்டோம்
கொண்டோமே கும்பமென்ற தென்பைக்கண்டோம்
கும்ப அஷ்டரவிமதியில் குருவேகண்டோம்
அண்டோமே திகிரிமலை கிரிகள் கண்டோம்

அம்மலையின் சாரல் தனிலாக்கினை கண்டோமே.

கண்டதொரு அண்டமெல்லாம் பார்த்தலாச்சு
கருவி கரணாதிகளுமது வாலாச்சு
விண்டதொரு சதாசிவன்தானகத்தியரைப் பார்த்து
மெய்ஞ்ஞானக் கடலென்று பீடந்தந்தார்
அண்டதொரு அகத்தியரு மாயிரந்தானின்னூல்
அதிதமென்ற செய்தியெல்லாஞ்சிவத் தோடருளினார்பார்
மண்டலங்கள் செகமுழுவதும் பிறவிச் செய்த
மகத்தியரும் வேணவரமருளினாரே.

மருளினார் சதாசிவந்தானகத்திய ரோடொக்க
மகத்தான வியாசரைத் தானழைத்தாரீசன்
வெருளினதோர் வரந்தந்ததாலே நீயும்
வேதம் நூல்சாஸ்திரங்கள் பதினெண்புராணம்
அருளினீர் மனிதர்கட்குப் பாரதங்களாக
அடைவான தர்மபுத்திர ரைவரென்றும்
பருளினீர் பாண்டவர்கள் கன்னனென்றும்
பரிவான காந்தாரி மக்கள் கேளே.

(ஆக்கினையின் தெரிசனத்தில் சகலமுமறிதல்)

கேளென்ற துரியோதனனாதி என்றும்
கெணிதமென்ற விட்டுமா சாரியென்றும்
ஆளென்ற அச்சுவத்தாம ரென்றும்
அனேகம்பேர் குருக்கள்மார் சேனையென்றும்
பாளென்ற பதினோரு அக்குரோணி யென்றும்
படைமன்னர் சேனையென்றும் ரதங்களென்றும்
துாளென்ற சதுரங்க பதாரியென்றும்
துரோபதைதான் பாஞ்சாலன்மகள் தானனென்றே.

என்றான எக்கியத்தில் பிறந்தாளென்றும்
மீரேழு புவனமெல்லாம் ரசாண்டாரென்றும்
அன்றான பதினெட்டு நாளைச் சண்டை
அதிகமென்ற பாரதங்களான தென்றும்
கொன்றான குந்திமக்கள் கர்னனென்றும்
கோடானகோடி படைதளங்க ளென்றும்
மன்றான தர்மர் துர்யோதரர்க்கு
மகத்தான வுயித்தியங்களா னவாறே.

வாரான நால்வேதமிதனோ டொக்க
மைந்தாவது வேதமென்றுங் கதைகளாக்கி
ஆறான சதாசிவத்தினருகே வந்து
அலங்கிருத மாகயிதையதிகம் பண்ணார்
மாறான மகாவேதமாகக் காட்டி
வாசனித்தீ சனண்டே வேதஞ்சொன்னார்
காறான சதாசிவமும் உலகத்தோர்க்கு
கதையாகக் கட்டினீர்கருத்துள்ளானே.

(60)

(நாலுவேதத் தன்மையறிந்து அஞ்சாம் வேதமென்று
பாரதத்தை உண்டாக்குதல் சதாசிவம் அகத்தியற்குபதேசம்
சகல பூசைக்குந் தொகுப்புக்கும் ஞானமறியவும்)

கருத்துள்ள வியாசருக்குப் பேருமீந்தார்
கனிந்ததோ ரவ்வேத வியாசரென்றும்
மருத்துள்ள சதாசிவமு மனமகிழ்ந்து
மானிடர்க்கு யீதுவேத மகிமையென்றார்
சருத்துள்ள சாமிபமவர்க்கே தந்தார்
சமத்தான அகத்தியற்குச் சாயுச்சியந்தந்தார்
நருத்துள்ள காவியந்தான ஞானகாவியம்
நவப்பிரம்ம பரப்பிரம்ம மிதுக்கொவ்வாதே.

ஒவ்வாத காவியந்தான் ஞானபீடம்
உலகத்தோற் கொவ்வாறு வொவ்வினாக்கால்
எவ்வாத யிறப்பிறப்பு யிரண்டுந்தள்ளி
யே..குவார் பரந்தள்ளி யீசனேது
சவ்வாது பரிமளங்கள் வாசம்போல
சங்கையில்லா ஞானமிதை வாங்கிக்கொண்டு
அவ்வாத சதாசிவமும் பூசைசெய்து
அகத்தியற்கு உபதேச மளித்தார்பாரே.

பாரப்பா பரபூசை கணேசபூசை
பரிவான பரப்பிரம்ம விஷ்ணுபூசை
நேசப்பா ருத்திரன்தன் மயேசபூசை
நெறியான சதாசிவத்தி னாதாரபூசை
ஆரப்பா சுப்பிரமண்ணியனதிக பூசை
அகோரமுடன் வீரபத்திர சூரியபூசை
மாரப்பா மதிசந்திரன் காலபூசை
மகத்தான பூசையெல்லா மருளுவோமே.

ஓமப்பா அஷ்டசத்தி அஷ்டபாலாள்
ஓகோகோ அஷ்டனாக ருத்திரபூசை
சேமப்பா சிதம்பரத்தின் தியானபூசை
தேவி மனோன்மணிவாலை பாலைபூசை
மாமப்பா மௌன சிவயோகபூசை
மகத்தான ஞானசத்திமானதமாம் பூசை
நாமப்பா நவக்கிரகம் வய்ரவர்தன்பூசை
நாதாந்த வாமத்தின் பூசைகேளே.

கேளப்பா புலத்தியனே பஞ்சகர்த்தாள்
கெடியான அஷ்டசித்துக் கெணிதபூசை
வாளப்பா வாமத்தின் கெவுனபூசை
மகத்தான அஷ்டகும்பக் குளிகைபூசை
வேளப்பா வேதாந்தசித்தார் பூசை
விளங்கியதோர் குருபூசை பூரணத்தின்பூசை
பாளப்பா பாசமதி உபநிடத்தின் பூசை
பரிவான முன்னோர்கள் பூசையாமே.

ஆமென்ற ஆயிதிரொதாயி பூசை
அதிகமென்ற அங்கன்யாச கரன்யாசபூசை
ஓமென்ற உடல்பூசை தத்துவத்தின்பூசை
ஓகோகோ பரிபூரண நிர்க்குணத்தின்பூசை
வாமென்ற முணுலெட்ச சகஸ்த்திரத்தின் பூசை
மணிமந்திர வாதவயித்தியத்தின் பூசை
வாமென்ற சித்தர் வத்துநாலு பூசை
மகத்தான பூசையெல்லா மருளுவோமே.

அருளுவோம் தியானமண்டலத்தின் பூசை
அளவற்ற சதாகோடி பூசையெல்லாம்
ஒருளுவோ மொவ்வொன்றாய் விரித்துநாமும்
ஓகோகோ புலத்தியனே உனக்காய்ச்சொல்வோம்
நருளுவோமிப் பூசை ஞானகாவியத்தில்
நளினமாய லங்கிருதமாகத் தானும்
வருளுவோம் வாம..மென்ற பூசையெல்லா
மாட்டுகிறோம் முன்னோர்கள் மார்க்கங்காணே.

(பரப்பிரம்மம் அறியும்படி கணபதி பூசை)

காணப்பா குண்டலிதான் தெய்வந்தெய்வம்
காணரிது காசினியில் கண்டாரானால்
ஆணப்பா அதிகசித்தி மோட்சமெய்யாம்
அளவிறந்த சதாகோடி காலம்வாழ்வார்
ஏணப்பா யின்னூலில் அதிகமான
யேக பரப்பிரம்ம மனுவாழ்க்கையெல்லாம்
நாணப்பா சதாசிவத்தின் கிருபையாலே
நாம்சொல்வோ மகத்தினுடை நன்மைபாரே.

பார்த்தோகள் பரப்பிரம்ம ஞானமின்னூல்
பதியான காவியந்தான் பண்போர்வாக்யம்
ஆர்த்தோர் களாயிரந்தான் ஞானபீடம்
அதிக மெஞ்ஞான அறிவுள்ளோர்க்கு
மார்த்தோர்கள் மனமதுவால் கனவுபோலே
மக்கனவில் சற்குருபோல் மதிகங்காண்பார்
மூத்தோர்கள் வாக்கதனால் சொன்னவாக்கியம்
முடித்தவரே மெய்ஞ்ஞானி முன்னோராமே.

முன்னுமில்லை பின்னுமில்லை முப்பாழ்க்கப்பால்
முகப்பான அகப்பதியா மகத்தில்கேளு
பண்ணுமில்லை யெண்ணுமிருப்பவற்கு னாமும்
பாலிப்போம் ஞானமொழி பதிவாழ்வோர்க்கு
அன்னமில்லை அவ்வன்னமோர் போதுண்ணு
அதிகமென்ற சிவயோகிக் கருளினோம்நாம்
வன்னமில்லை யண்ணல்தானுமைக்குச் சொன்னார்
அறிந்துமையும் நந்தீசர்க் கருளினானே.

அருளினதோர் நந்திதர்ம மந்திரிக்குச்சொல்ல
அவற்றிலே தர்மமந்திரி அசுவனிக்குச்சொன்னார்

மருளினதோரசுவனியு மகத்தியற்குச் சொன்னார்
மகத்தியனு முந்தனுக்கு அருளினோம்பார்
புருளினதோர் பூசையெல்லாம் ஞானகாவியத்தில்
புலத்தியனே புகட்டுகிறோம் புகழ்ந்துகேளு
கெருளினதோர் முதல்பூசைக் கெனிதமாக
மெணபதியின் குண்டலித் தாய்ப்பூசைகேளே.

கேளப்பா கெணபதியின் குண்டலியின்பூசை
கிருபையதாய்ச் சொல்லுகிறோம் பூரணத்தைக்கண்டு
ஆளப்பா ஆயிதிரோதாயி யம்பாள்
அகத்தியற்கு உபதேச மளித்தாள்கன்னி
வாளப்பா வவளுடைய கிருபையாலே
வசனிப்பா மாவிரத்தின் வண்மைகேளு
கோளப்பா வாராது குண்டலியின்பூசை
கூறுகிறோம் குருபரந்தன் அருவங்காணே.

(கெணேசனுடைய பஞ்சவாசல் கெணபதி ஐங்கோணம்
முக்கோணச் சக்கரம் அத்திப்பலகை)

அருவமாஞ் சுரூவமென்ற பூரணத்தைக்கேளு
அடிமுடியாங் கொடிமுடியின் கபாலங்கீழ்
சுருவமாஞ் சுழிமுனையென்றொரு வட்டந்தான்
சூட்சடா தரபிடமோங்கார வட்டம்
மருவமாமதினுள்ளே கிரிபேரி தழினாலும்
மதுநடுவில் குகையொன்று மக்குகையில்கேளு
திருவமாமஞ்சு சுற்றுமதிள் தானுண்டு
திருவுருவாங் கணேச கோபுரங்களுண்டே.

உண்டப்பா கோபுரமாங் கோவில்தன்னில்
ஓகோகோ பரபீடம் பீடந்தன்னில்
அண்டமாம் வாசலுக் கஞ்சதாகும்
அவ்வாசற் கெதிர்நடுவே பீடங்கேளு
பிண்டமாம் பீடத்தில் ஐங்கோணந்தான்
பேரான ஐங்கோணம்நடுவில் கேளு
முண்டமாய் கம்பமதாய் பரவெளியாய்நின்ற
முக்கோணச் சக்கரமாஞ் சக்கரத்தைக்கேளே.

கேளடா முக்கோணமேலே கேளு
கீறடா ஐங்கோணமகத் தாம்பீடம்
ஆளடா ஐய்ங்கோணச் சக்கரத்திலைய்யா
யவசிமந வென்றஞ் செழுத்தைநாட்டு
பேணடா பீசமதை விடுதோறுமாறு
பேராக யறிம் வறிம் சிறிம் மென்றாடு
மாணடா மறிம் நறிம் மென்றடவாய்திரும்
மதுநடுவில் முக்கோண வல்லபையைக்கேளே.

கேளப்பா முக்கோணமுகார பீடம்
கிருபையென்ற ஓங்கார வட்டந்தன்னில்
ஊளப்பா ஹீம் இறிம் ஓகோகோ

ஒறிமென்று ஊட்டுவாய் நீ
நாளப்பா நடுபீடம் சிறிம் கிறிம் என்றுந்தான்
நளினமென்ற அவ்வும்சிவ்வும் கணபதியேவாவா
ஆளப்பா வேணிருவர் பீடந்தன்னில்
அடிதொழுவே வரமளித்து அருள்வாழ்வென்றே.

வென்றான கெணேசபதி வல்லபையின்பீடம்
வேதாந்தி யானவற்கு விளம்பக்கேளு
ஒன்றான பீடமப்பா குண்டலியின்பீடம்
ஓகோகோ காணரிது காணக்கேளு
அன்றான அப்பீடம்..களே கேளும்
நன்றான சக்கரத்தை யதிலேகீறி
நாதாவிந்தா லட்சரத்தை மாறுமாறே.

மாறாடா புலத்தியனே யிவ்விதங்களாக
மாறினதோர் பலகையதை யெடுத்துக்கொண்டு
கோறடா குருபதத்தை மனதில்வைத்து
குருவான குண்டலியை மனதில்தாக்கி
ஏறடா எடுத்தசடங் கெட்டியாக
யேணியின்மேல் ஏணிவைத்துத் தொங்தமென்று
ஆறடா யிப்படியார் சொல்லப்பொரார்
ஆயிரந்தான் மெய்ஞ்ஞான மறிவித்தோமே.

அறியாத ஆரணியில் உற்பவித்தசென்மம்
ஆத்மாவில் கோடிக்கொன்ற றிவுள்ளோர்கள்
தெரியாத புத்தியைத் தானறியப்பண்ணி
தேசத்தில் மானுடரில் சேராமல்தான்
பரியாசம் பண்ணுவரோ டிணங்காமல்தான்
பலபுத்தி சஞ்சலத்தை யடித்துத்தள்ளி
பெரியாமல் பெரினப்பா பெரியோர்சொன்ன
பி..புத்தி அறிவதனைப் பேணிப்பாரே.

(ஆரணியில் புண்ணிய புருஷர்கள் செய்வது
பர்வம் பூர்வபட்சம் உத்திர அமாவிசினாயா)

பாரரப்பா புலத்தியனே ஞானயோகி
பாடினோம் மெய்ஞ்ஞானம் பத்துனூறில்
ஆரப்பா ஆயிரத்தின் கருவைக்கண்டு
அத்திமரப்பலகை தனில் அருளக் கேளும்
தேரப்பாதிப வொளி மதியினாலே
திரோதாயி மாய்கையைத் தானடித்துத்தள்ளி
ஒரப்பா வொருவருடன் அனுசரியாமல்தான்
வோகோகோ சந்திரயோகப் பருவங்காணே.

பருவமாம் பூர்வபட்சம் கிரகவுத்திரம்
பருவான அமாவாசி அருக்கனைய்யா
நருவமாம் நன்றைக்கு ராகுகாலம்
நளினமென்ற செய்காலம் நண்பாய்க்கண்டு
சருவமாஞ் சங்கையில்லா வாரந்தன்னில்

சமத்தான யில்லமதில் குகைதான்செய்து
அருவமாம் அக்குகையில் சுத்தபரிசுத்தம்
அஷ்டகெசம் நாலுதிசை மேடைபோடே.

போடுகின்ற மேடைதனில் கிழக்கேகேளு
புகழான கெணபதி சக்கரத்தைவைத்து
நாடுகின்ற யிந்திரரவியுதிக்கு முன்னே
நளினமென்ற வடமுகத்தில் சுப்பிரமண்ணியன்
மேடுகின்ற மேற்குமுகம் மேடைதன்னில்
மேலான வீரபத்திரன் அகோரம்பண்ணு
தேடுகின்ற தென்பக்க மேடைதன்னில்
தேவர்புகழ் வைரவனைத் தெரிசிப்பாயே..

தெரிசிப்பாய் நால்வருடைச் சக்கரத்தைமாறி
திருவான மேடைதனில் திறமாய்வைத்து
நரிசியாய்க் கெணபதியினிடப் பக்கத்தில்
நளினமென்ற வல்லபையின் சக்கரத்தைமாறி
முரிசிப்பாய் முக்கோணம் பலகை அத்தி
மூதண்ட குண்டலித்தாய்ப் பதத்தைப்போற்று
அரிசிப்பாய் ஆகாசம் நடுவில்கேளு
அப்பனே நல்சவுக்க மேடைபோடே.

போடப்பா மேடையெதிர் கிழக்கேகேளு
புனிதமென்ற வோமகுண்டம் புகழக்கேளு
தேடப்பா திருக்குளம்போல் அங்குலந்தானெட்டு
திருவாக வெட்டியதைச் செப்பக்கேளு
ஓடப்பா ஓமத்தீ வளர்ப்பதற்கு
யொன்றான யுருவியிட விறகுதானும்
ஆடப்பா நன்னாரி வில்வக்கொம்பு
ஆதண்டை செம்பருத்த அஞ்சுங்கொள்ளே.

கொள்ளடா புலத்தியனே அஞ்சுங்கொண்டு
கூறுகிறோம் ஓமக்குழிதனிலே போட்டு
தெள்ளடா தேன்கனியுங் கருப்பம்வெல்லம்
தெளிவான கதலியுடைப் பழந்தானஞ்சு
தள்ளடா தாம்பூலம் பாயாசம் பால்தான்
தவறாமலிது வகைகள் தனதாய்வைத்து
கள்ளடா காலைரவி முன்பதாகக்
கடுகெனவே யெழுந்திருந்து வைகையேகே.

ஏகடா புலத்தியனே ஸ்நானபானம்
யின்பமென்ற நேமநிஷ்டைய நுஷ்டானங்கள்
சேகடா சூரியசெபத் தியானந்தன்னை
செப்படா நூற்றியெட்டுத் தரமாய்மைந்தா
ஆகடா அதன்பிறகு பஞ்சாட்சரத்தியானம்
ஆதாரமதின் பிறகுசெய்து முடிப்பித்து
பாகடா வைகைவிட்டுக் குகைதானேகி
மகத்தான கெணபதியின் பீடஞ்செல்லே.

செல்லடா ஓமகுண்டமருகே வந்து
    செயலான மேடைதனில் மான்தோலிட்டு
புல்லடா முப்புரி நூல் மார்பிற்போட்டுப்
    புகழான தெர்ப்பைப்புல் மோதிரமாயிட்டு
வெல்லடா மண்கலசம் பிரம்மநூல் சுற்றி
    பேரான மாவிலைதான் கலசத்தில்வைத்து
பல்லடா பஞ்ச தீபாக்கினைதான் செய்து
    பரிவான மேடைதனில் பச்சரிசியோடே.

(நேம நிஷ்டை அநுஷ்டானம்)

போடுநீ பச்சரிசியதின் மேல்கலசம்
    புகழான கலசம் வைத்து புனிதமாக
பாடுநீ... தான்பபின்னியாசம் சாணம்
    பரிவாகச் செய்து முடிப்பித்துக்கொண்டு
காடுநீ காராவின் நெய்தானப்பா
    கணமணியே கொண்டுநீ கருவாய்க்கேளு
சேடுநீ ஓம்சிரீம் கிரீம் ஆம் உம் ஓமென்று
    செயலாக நூற்றியெட்டு தர்ப்பணமே செய்யே.

செய்யப்பா தர்ப்பணமே அங்கன்னியாசம்
    செயலான வோமகுண்டம் திறமாய்நீபும்
அய்யப்பா அம் அங் அரிம் உரிம் ஓமென்று
    அப்பனே நெய்விட்டு ஓமஞ் செய்து
செய்யப்பா செய்து முடிப்பித்துக் கொண்டு
    கிழக்கு முகமாக வல்லோ மேடைமீதில்
செய்யப்பா கொடக்கரணியாசஞ் செய்து
    செயலாகத் தருவின் பதம்தொழுது போற்றே.

போத்தடா முன்னியாசம் பின்னியாசம்
    புகழான சக்கரத்தில் பால்பழங்களாலே
கோத்தடா கும்பாபிஷம் பத்திரமாய்ச்செய்து
    குண்டலியின் பதம்போற்றிக் குருவின்பூசை
சேத்தடா தேன்கனியுமிள நீர்பாயாசம்
    செபலான வடைதோசை பால்பழங்கள்தானும்
ஆத்தடா அன்னமறு சுலையுந்தானும்
    அதிகமென்ற கனிகள் ளெல்லாம் வைத்துத்தானே.

தானென்ற சுப்பிரமண்யன் வீரபத்திரன்
    தருவான வயிரவற்கு மிவ்விதமாய்ச்செய்து
நானென்ற தாம்புலந் துாபதீபம்
    நளினமென்ற மகாபூசை நடவாய்நீயும்
தானென்ற முன்சொன்ன...ன் தியானம்
    மூதண்ட வுருவாக லட்சவுருசெபி
கோனென்ற குருபூசை செய்தாயானால்
    குண்டலித்தாய் பிரசன்னமாவாள் பாரே.

பாரப்பா செய்கண்டி சங்குபூரி
    பரிவான மாபேரி தாளந்தாரை

ஏரப்பா யெக்காளை துந்துபி மல்லாரி
　　யியல்பான பரிசங்கு ராவணாஸ்த்திரம்
நாரப்பா நாகசாந்த மாமேளங்கள்
　　நகாறுகின்னரி வீணை பதினெண்வாத்தியம்
போரப்பா பூசைசெய்து தியானஞ்செய்தால்
　　புகழான கெணபதிதான் புனிதமாமே.

புனிதமென்ற கெணபதியும் வல்லபையும் மைந்தா
　　புகழான பிரசன்ன மாவார்பாரு
முனிதமென்ற மூலாதாரபீடம் விட்டு
　　முன்னிமைக்குள் கனவதுபோல் முன்னேதோற்றும்
கெனிதமென்ற யிருவரையுங் கண்டாயானால்
　　கேளப்பா காயதித்தி கிருபையாக
வனிதமென்ற வல்லபையும் உபதேசஞ் சொல்வாள்
　　வரங்கொடுப்பார் கெணபதியும் வசனித்தோம்பார்

வசனித்தோம் மவுனவுபதேசம் சொல்வார்
　　வாழுலாங்கோடான கோடிகாலம்
கசனித்த காயமது சிவயோகஞ் சித்தி
　　கணக்கில்லா வாதசித்தி ஞானசித்தி
கெசனித்த கெவனசித்தி குளிகைசித்தி
　　கேள்மகனே மவுனசித்தி கிருபையாகும்
அசனித்த ஆதாரத்தத் துவங்கள்சித்தி
　　அதிகசித்தி கற்பசித்தியாகுந் தானே.

தானென்ற குண்டலித்தாய் பிரசன்னமானால்
　　தற்பரமே நீயாவாய் சித்தன்சித்தன்
பானென்ற பரமபதம் சாயுச்சியமாவாய்
　　பகிரண்டம் நவகண்டம் பாயலாகும்
வானென்ற வாசியதிற் கிருப்பிடமாய்த்தங்கும்
　　வாயுவதை யறைநொடிக்குள் அறியலாகும்
கானென்ற காவியமாம் வாதகாவியம்
　　கனசித்தி செயசித்தி காணுங்காணே.

காணடா முதல் காண்டம் யோகசித்தி
　　கண்மணியே கெணபதிதான் பிரசன்னமானால்
பாணடா பலிதசித்தி யாகுமாகும்
　　பாலகனே வைப்புமுறை பலிதமாகும்
வாணடா வாதத்துக் காதிபீடம்
　　வசனித்தோம் முதல்காண்டம் வண்மைபாரீர்
ஏணடா யிரண்டாவது காண்டமேகேளு
　　யென்சொல்வேனிதனுடைய கோர்வைநூலே.

நூலான வயித்தியத்துக் கெல்லாம்பீடம்
　　நுண்மையப்பா சற்குரு தானூலைப்பாரீர்
வாலான வயித்திய காவியமே சொன்னோம்
　　வயித்தியம் பொய்வாராமலென் நூல்பாரீர்
மாலான வேதமடா அதர்வண வேதம்
　　வசனித்தோம் மாந்திரிக காவியந்தானப்பா

ஆலான மாந்திரிக மென்னால் சொல்ல
அப்பனே நாவுமுன்டோ ஆயிரந்தானப்பா.

பாரப்பா புலத்தியனே மெஞ்ஞானபீடம்
பாடினோம் பரஞானமாயிரந் தானின்னூல்
ஆரப்பா யின்னூலை யறிவாரோதான்
அறிந்தாக் காலாதார மதிகசித்தி
தேரப்பா ஞானியென்ற பதவியுள்ளோர்
தெளியலாம் மெய்ஞ்ஞானசித்தர் வாழ்க்கை
சாரப்பா சதாகோடி காலம் வாழ்வாய்
சாயுச்சிய பதவியிலே சார்வார்தாமே.

தாமென்ற தாரணியோரின் னூற்கண்டால்
தற்பரமாய் பூசைசெய்து அடக்கமாக
ஏமேதானில்லத்தில் பதனம் பண்ணி
யின்னூலைக் கைவிடாது அடக்கஞ்செய்தால்
கோமேதான் குறையேது கர்மம்போச்சு
குருஅமுசை யெய்துமடா குணநல்லோற்கு
வாமே தானின்னூலை யொருவற்கீயா
வைத்திதனைப் பூசித்தோர் வாழ்வார்தாமே.

தாமென்ற லெட்சணமா மதிகநூலு
தாரணியோர் மனிதர் தன்னிலையைக்கண்டு
ஏமென்ற லெட்சணமுங்குணமுங் கண்டு
யெடுத்த சென்மராசியிலே கணந்தான்மைந்தா
நாமென்ற நட்சித்திர கிரகவாரம்
நல்வினை தீவினையுமது நன்றாய்ச்சொல்லும்
ஆமென்ற காவியந்தா னாயிரந்தான் மைந்தா
அதிகமென்ற லெட்சணத்தைப் பாருபாரே.

பாரடா காவியந்தானஞ்சுங் காணும்
பரிவான சவும்மிய சாகரமும் பாரு
ஏரடா யிதனுடைய கோர்வை நூலு
யென் மகனே பார்த்து நீயிறவா வாழ்வாய்
நூறடா சருக்கமது பாடல்நூறு
நுண்மையென்ற மூலகணபதியே சொன்னோம்
ஏறடா யிரண்டாவது சருக்கங்காண
யெடுத்துரைப்போம் மெய்ஞ்ஞானத்தாதி முத்தே.

**(101)**

அகத்திய சுவாமிகள் அருளிச் செய்த ஞானகாவியம்
முதலாம் காண்டம் முற்றும்.

---

End of Work : June 26, 2001
Text Entered by: Meena Kumar Vaikundam
Proof Read by: Chithra Meena Kumar வாழ்க தமிழ் ! வளர்க புகழ் !!

---

முதற்பக்கம் பொருளடக்கம்